**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம்**

**திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 80** **நாள் : 14.06.2021**

**என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!**

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.**

அடைக்கல அன்னையின் பேருதவியாலும் பெருங்கருணையாலும்

நலமோடு இருக்கிறீர்கள் என நம்புகிறேன்.

அதனையே ஆசிக்கிறேன்.

பெருந்தொற்றின் காரணமாக நம்மால் பல செயல்பாடுகளை

குறித்த காலத்தில் செய்ய இயலவில்லை.

**அவ்வாறு காலதாமதமான ஒன்று நம் மாற்றம்.**

வழக்கமாக மே மாதத்தில் அனுப்பப்படவேண்டிய மாற்றப்பட்டியல்

ஏறக்குறைய ஒரு மாதத்திற்குப்பின் இப்போது அனுப்பப்படுகிறது.

மாற்றம் என்பது சிலருக்கு மகிழ்ச்சியானதாக இருக்கலாம்.

ஒரு சிலருக்கு வருத்தம் தரும் அனுபவமாகவும் இருக்கலாம்.

எல்லா நிகழ்வுகளும் நம் வாழ்வில் இறைவனால் திட்டமிடப்படுகின்றன

என்ற ஒன்றை மட்டும் நம் உள்ளத்தில் பதியவிட்டால்

மாற்றமோ மாற்றமின்மையோ எதுவும் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது.

**அன்புக்குரியவர்களே!**

நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளை ஊன்றிக் கவனித்தால்

இறைவன் நம்மை நம் ஊற்றுக்கு அழைத்துச் செல்வதை நாம் உணர முடியும்.

**'ஊற்றுக்குத் திரும்புங்கள்'** என்று பல்வேறு அழைப்புகள் நமக்கு அனுப்பப்பட்டும்

நாம் அதுபற்றி அக்கறையின்றி வாழ்ந்து வந்தோம்.

இன்று **காலம் நம்மை ஊற்றுக்கு அழைக்கிறது.**

நம் ஆடம்பரங்கள் அதற்கான செலவினங்கள்

கொஞ்சம் கொஞ்சமாக நம்மை விட்டு அகல்கின்றன.

நம் பெருமை வெற்றி அதிகாரத்தின் அடையாளமாக இருந்த

கல்வி நிறுவனங்கள் முக்கியத்துவம் இழக்கின்றன.

சாதாரண எளிய வாழ்வுக்கு இயல்பாக நாம் தள்ளப்படுகிறோம்.

இயற்கையின் அவசியத்தை ஆக்ஸிஜன் நமக்கு வலியுறுத்திவிட்டது.

இனி ஆடம்பரமான வீடுகளை விட,

ஆரோக்கியமான இயற்கை சுவாசத்திற்கு வழி செய்யும்

கிராமங்களே உகந்தது என உணரத்தொடங்கி இருக்கிறோம்.

இலை தழைகளை உணவில் கூட ஒதுக்கிவந்த நாம்

கிடைக்கின்ற எல்லா இலைகளையும் கசாயமாக்கி குடிக்கத் தயாராகிவிட்டோம்.

மிக அத்தியாவசியமான ஒன்றையும் உணர்ந்து கொள்வோம்.

இனிமேல் துறவிகளாகிய நமக்கு செபமின்றி வாழ்வில்லை.

செபம் மட்டுமே நமக்குப் பிராணன் ஆக இயலும்.

இதற்காகவே நாம் துறவை மேற்கொண்டோம்.

**ஊற்றுக்குத் திரும்புவோம்.**

இடைவிடாத செபம் என்ன பணிகள் செய்தாலும்

இயல்பாக இறைவனோடு உள்ள தொடர்பில்

உறுதியாக நிலைத்திருக்கும் தன்மை

நம்மில் வளர்ந்தே ஆகவேண்டும்.

நாம் செப மனிதர்களாக வாழவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

செபமின்றி நம் பணிகள்

விழலுக்கு இறைக்கப்பட்ட நீர் என உணர்வோம்.

**செபத்தை நம் சுவாசமாக்குவோம்**

**இறைபிரசன்னம் நம் வாழ்வாகட்டும்.**

**இறை திருவுளம் நம் வழியாகட்டும்.**

இந்த மனநிலைக்குள் நாம் பயணிக்க ஆரம்பித்தால் அனைத்தும் நலமாகும்.

இந்த மனநிலை இடம், பணி, ஆட்கள் என்ற

எந்த பரிமாணத்தையும் நாம் கடந்து செல்ல

நமக்கு உறுதுணை புரியும்.

மாற்றமானாலும் மாற்றம் இல்லையானாலும்

விரும்பிய இடமானாலும் விரும்பிய பணியானாலும்

விரும்பாத இடம், பணிகள் ஆனாலும்

நம்மோடு '**ஆண்டவர் பயணிக்கிறார்**' என்ற

புரிதலில் வளர்வது மிகமிக அவசியம்.

வயதில் சிறிய அருட்சகோதரிகள் பலரிடம்

இந்த விசுவாச உணர்வு குறைவாக இருப்பது வருத்தமளிக்கிறது.

தயவு கூர்ந்து வந்த நோக்கத்தை நிறைவு செய்து

வாழ்வை இறைவனின் திருவுளத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்வோம்.

சொந்த விருப்பு வெறுப்புகள் வெகுவாக நம்மை

ஆட்டிப்படைப்பதைக் களைய முற்படுவோம்.

ஆண்டவரின் பாதத்தில் சரணடைவோம்.

**சகோதரிகளின் கவனத்திற்கு.**

- மாற்றம் பெறும் சகோதரிகள் 30.06.2021 அன்று புதிய பணித்தளங்களில் பணிப்பொறுப்பேற்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை Lockdown மேலும் தொடர்ந்தால் நீங்கள் போய் சேரவேண்டிய நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

- மாற்றம் செய்யப்படுவது தனிப்பட்ட சகோதரிகளின் ஆன்ம, குழும நலன்களுக்காகவும், நிறுவனங்களின் சபையின் தேவைக்காகவும் மட்டுமே என்பதை புரிந்து கொள்ளுங்கள். உங்களின் மாற்றத்தில் உள்நோக்கம் இருப்பதாக எண்ணிக்கொண்டு நீங்களாக வருத்தப்பட வேண்டாம். இவர்களோ, அவர்களோ காரணம் என்று சொல்லி மனதில் காயத்தை உண்டாக்க வேண்டாம். ஒன்றை உணர்ந்து கொள்ளுங்கள்; யோசேப்பை பாழுங்கிணற்றில் சகோதரர்கள் தள்ளியது அவன் எகிப்தின் அதிபராக அவனுக்கு முன்னோட்டமாக இருந்தது. நீங்கள் விசுவசித்தால் மனிதரின் தீமைகள் உங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. **விசுவாசத்தை ஆழப்படுத்துவோம்.**

- பொறுப்பில் உள்ள சகோதரிகள் மாற்றம் பெற்றால் உரிய ஆவணங்களை முறைப்படி ஒப்படைத்துவிட்டுச் செல்லுங்கள். வழக்கமாக ஒரு பக்கத்திற்கு எழுதப்படும் பட்டியல் உங்களுக்குத் தெரிந்ததுதானே.

- ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல அரசுப்பணியில் உள்ள அருட்சகோதரிகளுக்கு மற்றுமொரு மாற்றப்பட்டியல் கல்வி நிறுவனங்களில் நிரவல் பணி முடிந்தபின் அனுப்பப்படும்.

- கல்வி நிறுவனங்களின் சேர்க்கை அறிவிக்கப்பட்டிருப்பதனால் கல்விப்பணிபுரியும் சகோதரிகள் மாணவ மாணவியர் சேர்க்கையில் கவனம் செலுத்துங்கள்.

- குழுமங்களில் தனிசெபத்திற்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் அதிக முன்னுரிமை தர அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**அடைக்கலத் தாயிடம் உங்கள் ஒவ்வொருவரையும் ஒப்படைக்கிறேன்.**
**உங்களின் உடல் உள்ள ஆன்ம தேவைகளில்**
**அவரே உங்களை வழிநடத்துவார்.**

**அடைக்கல அன்னையின் மக்களாக**
**விண்ணகப் பயணத்தில் இணைந்து வழிநடப்போம்.**

**அக ஒளிப்பயணத்தில் தோழமையுடன்**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**